அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2011

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 1

**அதிமேற்பிரிவு**
(12-14 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

**அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.**
*புள்ளிகள்: 5*

1. ஞாயிற்றுக்கிழமை = ________________ + ________________
2. குடலாமை = ________________ + ________________
3. தமிழிசை = ________________ + ________________
4. பூச்சரம் = ________________ + ________________
5. துப்பறிபவர் = ________________ + ________________

| புள்ளிகள் | |
|---|---|

**ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.**
*புள்ளிகள்: 5*

1. மணி + என்ன = ________________________
2. பொன் + குடம் = ________________________
3. கண் + புலன் = ________________________
4. மணம் + கோலம் = ________________________
5. கண் + இமை = ________________________

| புள்ளிகள் | |
|---|---|

இ) ஒவ்வொரு கேள்வியிலும் (அ) வில் தந்த வசனத்தின் பொருள் மாறாது மாற்றி (ஆ)-வில் தொடக்கப்பட்ட வசனத்தைப் பூர்த்தி செய்யவும். **புள்ளிகள் - 20**

உதாரணத்தைப் பாரக்கவும் ---
அ) புயற்காற்றோடு பெரும் மழை தொடர்ந்து பெய்ததனால் பயிர்கள் எல்லாம் அழிந்து விட்டன.
ஆ) பயிர்களின் அழிவிற்குத் தொடர்ந்து பெய்த பெரும் மழையும் புயற் காற்றும் காரணமாயின.

**கேள்விகள்** -

1. அ) கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த இரு உலகப் போர்கள் பேரழிவுகளை ஏற்படுத்தின.

ஆ)இரு உலகப் போர்களால் ---------------------------------------------------------

……………………………………………………………………………….………

2. அ) தன்னம்பிக்கை கொண்டவர்கள் தோல்வியைக் கண்டு மனம் தளர்வடையமாட்டார்கள்

ஆ) தோல்வியைக் கண்டு மனம்… …………………………………

…………………………………………………………………………………

3. அ) நேரத்தை ஒழுங்குபடுத்திக் கடமைகளைச் செய்யத் தவறும்போது வாழ்க்கை வீணாகிவிடுகிறது

ஆ) வாழ்க்கை வீணாகாமல் இருக்க

……………………..…………………………..................................................

4. அ) சிறுபான்மையோரின் மொழியும் பண்பாடும் பேணிக் காக்கப்படாவிடில் அவை அழிந்துவிடும்

ஆ) சிறுபான்மையோரின் மொழியும் பண்பாடும் அழியாதிருக்க வேண்டுமாயின் ………………………………………………………...

5. அ) வரவுக்கு மேல் செலவு செய்பவர்கள் வாழக்கையில் மிகவும் துன்புறுவார்கள்.

ஆ) வாழ்க்கையில் மிகவும் துன்புறுபவர்கள்

……………………………………………………………………………………

| புள்ளிகள் | |
|---|---|

ஈ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தெரிந்து பந்திகளிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.

**புள்ளிகள் - 20**

ஒருவித ……………………இல்லாமல் எவரும் இருக்க முடியாது. ஒருவர் தன்னிடம் என்ன திறமை இருக்கிறது என்பதை உணராமல் இருக்கலாம். பலருடைய திறமைக் குறைவுக்கு அவர்களின் ……………………. முக்கிய காரணமாக இருக்கமுடியும். எதையும் ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் செய்ய விரும்பாமல் வாழ ……………………… சோம்பேறிகளின் வாழ்க்கையில் குடும்பவாழ்க்கையின் இனிய சங்கீதம் கேட்பதற்கு வழியே இல்லை. வாழக்கை இனிய நாதம் நிரம்பியது என்பதை அவர்கள் அறியாதவர்கள். சுயமாக உழைத்து வாழ்க்கையில் ………………………..வெற்றி காண அவர்களால் முடிவதில்லை. சோம்பேறிகளாய் வாழ்ந்தாலே போதும் என அந்த வெற்றுச் சங்கீதத்தில் திருப்தி………………… எந்தச் சங்கீதமும் தானாகப் பிறப்பதில்லை. ஒருவர் ஓசையை ஒழுங்குபடுத்தி வெளிப்படுத்தும் போது ஏற்படும் ஒலி…………………………இனிய கானமாகிக் காற்றின் மூலம் நல்ல சங்கீதமாக எமக்குக் கேட்கிறது. ஒருவரின் தனிப்பட்ட முறையான பயிற்சியினால் மட்டுமே அவரின் ………………………வளர்ந்து சிறப்படைகிறது. சங்கீதத்தில் ஒரு தனிப்பட்ட பிரிவில் ……………………விசேடதேர்ச்சி பெறுகின்ற போது அவரது வித்துவத்தன்மை தனித்திறமை அடைகிறது.

ஒருவர் தமது வாழ்க்கையிலும் புதிய திறமைகளை வளர்த்துக் கொள்வதில் நன்மைகள் பல ஏற்படுகின்றன.. வாழ்க்கைத் தரத்தில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள அவை பெரிதும் உதவுகின்றன. எப்போதும் திரும்பத் திரும்ப ஒரே வேலையைத் தினந்தினம் செய்வதால் ஏற்படுகினற் மனச்சோர்விலிருந்து விடுபடுவதற்கு………………………… புதிய பல திறமைகளை வளர்த்துக் கொள்கின்றபோது ஏதோ ஒன்றில் மனம் அதிகமாக ஈடுபாடு கொள்கிறது. முழுமனத்தோடு எதைச் செய்தாலும் அது நம்முடைய செம்மையான ………….. தரத்தை உயர்த்துகின்ற உந்துசக்தியாக அமைகிறதல்லவா?.

| | |
|---|---|
| வாழ்க்கையின் | வாயப்பளிக்கிறது |
| சோம்பற்றன்மை | திறமையும் |
| முயல்கின்ற | அதிர்வுகளே |
| காண்பவர்கள் | நுணுக்கமான |
| திறமை | முன்னேறி |

| புள்ளிகள் | |
|---|---|

அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2011

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

**அதிமேற்பிரிவு**
(12-14 வயதுப் பிரிவு)
காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

உ) கீழே தந்த (கொச்சைத் தமிழ்ச்) சொற்களைத் தூய தமிழில் (நல்ல தமிழில்) எழுதுக. **புள்ளிகள் - 5**

1. வேணும் ……………………………………………………………
2. போறன் ……………………………………………………………
3. ஏலாது ……………………………………………………………
4. இருக்குது ……………………………………………………………
4. இஞ்சை ……………………………………………………………

| புள்ளிகள் | |
|---|---|

ஊ) பின்வரும் கவிதையைப் படித்த பின் கீழே காணப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக. **புள்ளிகள் - 20**

## கத்தரித் தோட்டத்து வெருளி

"கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! – நன்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறு யார்?- உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறு யார்?

தொட்டு முறுக்காத மீசையைப் பார் - கறைச்
சோகி போலே பெரும் பல்லைப் பார்
சோகி போலே பெரும் பல்லைப் பார்
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார் -ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்

பூட்டிய வில்லும் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ? – உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ?
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண்(டு) ஓடுதே – வெடி
வாலைக் கிளப்பிக்கொண்(டு) ஓடுதே

சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதைபோல்
தேசத்திலே பலர் உண்டுகாண் - இந்தத்
தேசத்திலே பலர் உண்டுகாண்
அங்கவர் தம்மைக்கண்(டு) ஏமாந்து போகா
அறிவு படைத்தனன் இன்றுநான் - உன்னில்
அறிவு படைத்தனன் இன்று நான்"

1) கத்தரித் தோட்டத்திலே எதற்காக ஒரு வெருளியை நாட்டி வைப்பார்கள் என்று புலவர் கூறுகிறார்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

2) கத்தரி வெருளி எப்படி வேலை புரிகிறது என்று கூறப்பட்டுள்ளது?

------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------

3) கத்தரி வெருளியின் மீசை. பல் எப்படியானவை என்று கவிதையிற் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

........................................................................................................................................

4) தோட்டத்திலே மேய வந்த பசு கத்தரிவெருளியில் எவற்றை எல்லாம் கண்டு பயந்து ஓடும் எனக் கூறப்பட்டுள்ளது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

5) சிங்கத்தின் தோலினைப் போர்தத் கழுதைபோலத் தேசத்திலே பலர் உண்டு. - இந்தக் கூற்று எதை உங்களுக்கு விளக்குகிறது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

| புள்ளிகள் | |
|---|---|

எ) கடிதம் அல்லது கட்டுரை ஒன்றை எழுதவும் - புள்ளிகள்: 25

1- கடிதம்

ஒரு நாள் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் இரவு உணவு உண்பதற்கு ஓர்
உணவகத்திற்குச் செல்கிறீர்கள். அங்குள்ள வசதிகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் போன்றவை உங்களுக்கு மனநிறைவை அளிக்கும் வகையில் இல்லை. அதனை அவ்வட்டார நகர மன்றத் தலைவருக்குத் தெரியப்படுத்த நீங்கள் விரும்புகிறீர்கள்., இதனை விளக்கி நீங்கள் அவருக்கு ஒரு கடிதம் எழுதவும். உங்களுக்கு மனநிறைவை அளிக்காத விடயங்கள் குறித்தும் அவற்றை மேம்படுத்த நீங்கள் அறிவுறுத்தும் ஆலோசனைகள் பற்றியும் கடிதத்திற் குறிப்பிடலாம். கடிதம் 200 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

- ு முக்கிய கவனத்திற்கு - இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது உமது பெயரையும் முகவரியையும ் குறிப்பிடாமல் **“எழில்”** என்னும் புனை பெயரையும் 100, பேர்லிங்கன்

வீதி கோம்புஸ். நி.ச.வே 2140 என்னும் முகவரியையும் குறிப்பிடுக.

நகர மன்ற முகவரி:
தலைவா்,
நகரமன்றம்
கோம்புஸ்
நி.ச.வே 2140

……………………..

……………………..

2.- கட்டுரை-

கீழ்வரும் கட்டுரைக் குறிப்புகளுள் ஒன்றைப்பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை
எழுதுக.

1 நீங்கள் சமூக சேவை ஒன்றிற் பங்குபற்றியபோது அதில் நீங்கள் பெற்ற
அனுபவங்களையும் உணர்வுகளையும் விளக்கி எழுதுக.

2. இளம் வயதினார் முறைகேடான செயல்களில் ஈடுபடுவதற்கான காரணங்களையும்
அதனால் ஏற்படும் விளைவுகளையும் அவற்றை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது
பற்றியும் உங்கள் கருத்தை விளக்கி எழுதுக.

3. எதிர் காலத்தில் நீங்கள் சாதிக்க விரும்பும் ஒரு சாதனை பற்றி விளக்கி எழுதுக.

| **புள்ளிகள்** | |
|---|---|

| **மொத்தப் புள்ளிகள்** | |
|---|---|